ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

## 01.10.2023

தலைப்புச்செய்திகள்

1.பிரதமர் திரு.நரேந்திரமோதி மாபெரும் தூய்மையே சேவை ஸ்வச்சதா இயக்கத்தை இன்று தொடங்கிவைத்தார். நாட்டின் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மை பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

2. நீலகிரி மாவட்டம் குன்னூர் பேருந்து விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

3. திருச்சி கோரையாறு கரையை 330 கோடி ரூபாய் மதிப்பில் பலப்படுத்தும் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

4. கோவை தேனி திண்டுக்கல் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டு போட்டியில் பேட்மிண்டன் ஆடவர் குழு போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோதி தலைமையில் மாபெரும் தூய்மையே சேவை ஸ்வச்சதா இயக்கம் இன்று நடைபெற்றது.

புதுதில்லியில் காலை 10 மணிக்கு தூய்மை பணிகளில் பங்கேற்ற பிரதமர், காந்திஜெயந்தி நாளை கொண்டாடப்படும் நிலையில் அன்னாருக்கு அஞ்சலி

செலுத்தும் விதமாக தூய்மை பணிகளை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மத்திய அமைச்சர்கள் திரு.தர்மேந்திர பிரதான், டாக்டர் ஜிதேந்திரசிங், ஹர்தீப்சிங்பூரி, திருமதி மீனாட்சி லெகி, கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா, உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

இந்திய ராணுவம் கடற்படை, விமானபடை அதிகாரிகள் மத்திய அரசு அலுவலர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் பொதுமக்களுடன் இணைந்து தூய்மை பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டனர்.

நாடுமுழுவதும் பொதுஇடங்கள், சந்தைகள், ரயில் நிலையங்கள், நீர்நிலைகள், சுற்றுலாத்தளங்கள் உட்பட 7 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மை பணிகள் நடைபெற்றன.

செங்கல்பட்டு நைனார்குப்பம் கடற்கரை பகுதியில் நடைபெற்ற தூய்மையே சேவை நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி கலந்துகொண்டார்.

கோவையில் பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன்,

கட்சியின் மாநில தலைவர் திரு.அண்ணாமலை உள்ளிட்டோரும் ஈடுபட்டனர்.

தூய்மையே சேவை நிகழ்ச்சி குறித்து வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட உணவு பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் மண்டல துணை பொதுமேலாளர் திருமதி சோபனா குமார் எமது செய்தியாளரிடம் பேசுகையில்:

வாய்ஸ்

திருச்சியில் பத்திரிக்கை தகவல் அலுவலகம், திருச்சி மக்கள் தொடர்பகம், தேசிய தொழில்நுட்ப கல்வி கழகம் ஆகியவை இணைந்து தூய்மை பணிகளை மேற்கொண்டன.

இதில் பங்கேற்ற தேசிய தொழில்நுட்ப கல்வி கழக மாணாக்கர் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

வேலூர் மாவட்டம் கணியம்பாடியில் நாகநதி ஆற்றில் தூய்மை பணிகளை மேற்கொண்ட பொதுமக்கள் தெரிவிக்கையில்

வாய்ஸ்

சென்னை மெரினா கடற்கரையில் இந்திய உணவுக்கழக மண்டல அலுவலர்கள் தேசிய மாணவர் படையுடன் இணைந்து தூய்மை பணிகளை மேற்கொண்டனர்.

அரியலூர் தர்மபுரி ராமநாதபுரம் நாமக்கல் திருவள்ளூர் திருப்பூர் விருதுநகர் விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் பிரதமரின் அழைப்பை ஏற்று தூய்மை பணிகளில் ஏராளமானோர் ஈடுபட்டனர்.

அந்தமான் நிக்கோபார் போர்ட்பிளேரில் துணை நிலை ஆளுநர் அட்மிரல் டி.கே.ஜோஷி தலைமையில் பல்வேறு துறை பணியாளர்கள், பள்ளி மாணாக்கர் தூய்மை பணிகளை மேற்கொண்டனர்.

************

பிரதமர் தெலுங்கானா

தெலுங்கானா மாநிலத்தில் 21 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு பிரதமர் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

இந்நிகழ்ச்சியில் 2 ஆயிரத்து 661 கோடி ரூபாய் மதிப்பிலான ஹசன், சார்லப்பள்ளி குழாய் எரிவாயு இணைப்பு வழிடத்தை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

இதன்மூலம் 37 லட்சத்திற்கும் அதிகமான எரிவாயு நுகர்வோர் பயன்பெறுவர்.

தொடர்ந்து 505 கோடி ரூபாய் மதிப்பிலான ஜாக்லேர் - கிருஷ்ணா ரயில் வழி தடத்தையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

வரும் செவ்வாய்கிழமை நிஸாமாபாத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பிரதமர் சர்வதேச தரத்திலான 800 மெகா வாட் மின் உற்பத்தி நிலையத்தை திறந்துவைக்கிறார்.

************

உதகை விபத்து

நீலகிரி மாவட்டம் குன்னூரில் சுற்றுலா பேருந்து விபத்திற்குள்ளானதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோதி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா 2 லட்ச ரூபாயும்,

காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

குன்னூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த மாநில மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் ஆகியோர் சிகிச்சை குறித்து கேட்டறிந்தனர்.

முன்னதாக உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் அவர்கள் வழங்கினர்.

************

கே.என்.நேரு

திருச்சி குடமுருட்டி பகுதியிலிருந்து பஞ்சப்பூர் வரை கோரையாற்று கரையை பலப்படுத்த 330 கோடி ரூபாய் மதிப்பலான திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று குப்பைகளை தரம் பிரிக்கும் ரோபோட்டிக்ஸ் வாகன செயல்பாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் அனைத்து ஆறுகளிலும் தூர்வாரும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளதாக கூறினார்.

பாதாள சாக்கடை பணிகள் 80 சதவிகிதம் நிறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

************

ரத்ததான தினம்

தேசிய ரத்ததான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்தியில் தன்னார்வ ரத்த தானத்தில் தமிழ்நாடு 100 சதவிகித இலக்கை எட்டியுள்ளதாகவும்,

18 வயதுமுதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் ரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

ரத்ததானம் மட்டுமன்றி பிளாஸ்மா தானமும் செய்வோம் வாழ்வை பகிர்ந்துகொள்வோம் என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

***********

காய்ச்சல் முகாம்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலம் முடியும் வரை காய்ச்சல் கண்டறியும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதனிடையே அனைத்து மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சல் கண்டறியும் சிறப்பு முகாம்கள் இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மாநிலத்தில் டெங்கு கட்டுப்பாட்டில் உள்ளபோதும் அரசின் நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

***********

கிராம சபை

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நாளை கிராம சபைக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

தூய்மை பாரத இயக்கம், ஜல்ஜீவன், பிரதமர் ஊரக குடியிருப்பு திட்டம், நடப்பு நிதியாண்டிற்கான சமூக தணிக்கை செயல்திட்டத்தை அறிவித்தல் உள்ளிட்டவை குறித்து இதில் விவாதிக்கப்படும்.

***********

எடப்பாடி

காவிரி நதி நீர் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க தமிழ்நாடு அரசு அனைத்து கட்சி கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறுவை நெற்பயிர்களை காப்பாற்ற தமிழக அரசு தவறிவிட்டதாக குறை கூறினார்.

************

அன்புமணி ராமதாஸ்

தமிழ்நாட்டில் பத்திரிக்கையாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு நிலுவையில் உள்ள நல திட்ட உதவிகள் விரைந்து வழங்கப்பட வேண்டும் என பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

************

அய்யாகண்ணு

தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசை கண்டித்து, விவசாய சங்க தலைவர் திரு.அய்யாகண்ணு தலைமையில் திருச்சி குடமுருட்டி பகுதியில் ரயில்மறியல் போராட்டம் இன்று நடைபெற்றது.

திருச்சி கரூர் ரயில் பாதையில் மறியலில் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

************

திண்டுக்கல் பழனி

திண்டுக்கல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் செல்.ஃ.போன் மற்றும் புகைப்பட கருவிகளுக்கு இன்றுமுதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

************

அணை

நெல்லை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்துவரும் கன மழை காரணமாக அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி அதிகரித்து 80.5 அடியாக உள்ளது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 17 அடி உயர்ந்து 104.7 அடியாக அதிகரித்துள்ளது.

இதனிடையே அம்பா சமுத்திரம், சேரன்மாதேவி களக்காடு, ராதாபுரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

முல்லை பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் 120 அடியாக உள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 3 ஆயிரத்து 400 கன அடியாக குறைந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 36.9 அடியாக சரிந்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக உள்ளது.

***********

வானிலை

நீலகிரி, கோவை, திண்டுக்கல் தேனி தென்காசி கன்னியாகுமரி நெல்லை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் 45 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

ஆசிய விளையாட்டு

சீன ஹாங்ஸுவில் நடைபெறும் ஆசிய விளையாட்டு போட்டிகளில் குழு துப்பாக்கி சுடும் போட்டியில் இன்று இந்திய ஆடவர் அணி தங்கப்பதக்கமும்,

மகளிர் அணி வெள்ளிபதக்கமும் வென்றன.

மகளிர் கோல்.ஃ.ப் பிரிவில் இந்தியாவின் அதிதி அசோக் வெள்ளி பதக்கம் வென்றார்.

இதையடுத்து 11 தங்கம் 16 வெள்ளி 14 வெண்கலம் உட்பட 41 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 4 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

பேட்மிண்டன் ஆடவர் குழு போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று பிற்பகல் இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

இந்திய மகளிர் ஹாக்கி அணி தனது இரண்டாவது ஆட்டத்தில் தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************